**தலைப்பு - 428 - மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.
மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மீளாய்வாண்டில் தாபிக்கப்பட்டு உள்ளமையினால் சென்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பொது நிதிச் சுற்றறிக்கை 02/2020 தொடர்பாக பொதுக் கணக்கு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 06 இன் 7(vi) அமைவாக கட்டுநிதி சீராக்கல் கணக்கொன்றினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய பொது நிறுவனங்களின் செலவின விடயங்களின் கீழ் பெறப்பட்ட ஒதுக்கீடுகளின் படி மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் பதியப்படாமையினால் கட்டுநிதி சீராக்கல் கணக்கினை தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் இல்லாதிருந்தமையினால் கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிப்பினை மேற்கொள்ளப்படவில்லை. | நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) மீண்டெழும் செலவினங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) 16 செலவின தலைப்புக்களுக்கான திறைசேரி அச்சீட்டின் படி செலவின சாராம்சம் மற்றும் நிதிக் கூற்றுக்களின் நிகழ்ச்சித்திட்ட செலவின கூற்றுக்கிடையே ரூபா 836,404 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 118 செலவின தலைப்புக்களுக்கான மகாவலி நீர்ப்பாசன மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு 2020 ஆகஸ்ட் 31 வரை செயற்பட்டதுடன் 2020 செப்தெம்பர் 01 முதல் புது அமைச்சினை தாபிக்கப்பட்டிருந்தது. மகாவலி வலயங்களை அண்டியுள்ள பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் (428) செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் 160 செலவின தலைப்பின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. புதுச் செலவின தலைப்பு இலக்கம் 428 இன் கீழ் ஒதுக்கீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகத வரை இவ் அமைச்சு பொதுவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் செலவினத்திற்கு புது அமைச்சின் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டினை சேர்க்கப்பட்டு திறைசேரியின் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு வரவு செலவு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீட்டின் கூட்டுத் தொகையினை அண்மித்த மதிப்பீட்டினை கொண்டுள்ளமையினால் இலக்கங்களுக்கிடையில் இவ்வாறான வேறுபாடு காணப்படுகின்றது. | வேறுபாடு களுக்கான காரணிகளைத் தேடி அவற்றினை சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிக்கூற்றுக்களில் நிகழ்ச்சித் திட்ட செலவின கூற்றின் படி ரூபா 14,742,399 மற்றும் திறைசேரி அச்சிடப்பட்ட செலவின பொழிப்பினையின் படி ரூபா 13,973,388 ஆகி இருந்தமையினால் ரூபா 769,011 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 428-1-2-1003 கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 418,064 செலவு பட்டதாரி பயிலுனர்களுக்காக 130-1-14-0-1003 செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினமானதுடன் 428-1-2-1409 கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 350,947 தொகை தேர்தல் அலுவலக செலவின விடயம் இலக்கம் 020-1-1-4-1409 கீழ் பதியப்பட்ட மாற்றுப் பத்திர பெறுமதியாகும். இச் செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் நி.பி 208 இன் கீழ் அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தவறுதலாக 428 இன் கீழ் அறிவிக்கப்பட்டமையினால் இவ்வேறுபாடு கிடைக்கப் பெற்றுள்ளது. | சரியாக கணக்கீட்டினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**(ஆ) மூலதன செலவுகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நிகழ்ச்சித் திட்டங்களின் படி செலவின கூற்றில் ஏனைய செலவின விடயத்திற்கான மொத்தச் செலவு ரூபா 1,562,892 ஆக இருந்த போதிலும் திறைசேரி அச்சுச் செலவின பொழிப்பின் படி அந்த செலவின விடயத்திற்காக எதுவித செலவும் காணப்படாமையினால் ரூபா 1,562,892 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இச்செலவு 425 நீர்ப்பாசன அமைச்சின் கீழ் பெற்ற ஒதுக்கீடான படியினால் அது 425 நீர்ப்பாசன அமைச்சின் திறைசேரி அச்சு செலவின பொழிப்பில் பதியப்படும். அந்த செலவினையும் நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் பதியப்பட வேண்டியிருந்த போதிலும் தவறுதலாக 428 இன் கீழ் அறிக்கையிடப் பட்டுள்ளமையினால் இவ் வேறுபாடு கிடைக்கப் பெற்றுள்ளது. | சரியாக கணக்கீட்டினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 06 இற்கு அமைய மேற்கொண்டும் அறிவிக்கப்பட வேண்டிய நிதியல்லா சொத்துக்கள் இருப்பின் அவற்றினை முறையாக இனங்காணப்பட்டு கிரயத்திற்கு அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியினைக்கு கணக்கிலிடப்பட வேண்டுமென அறியத் தரப்பட்டிருந்தது. அப்படியான போதிலும் 2020 திசெம்பர் 18 ஆந் திகதி மற்றும் 2020 திசெம்பர் 22 ஆந் திகதி நீர்ப்பாசன திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட 10 வாகனங்களைக் கையேற்பதற்கும் கணக்கிலிடப்படுவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு குறித்துக் கொண்டதுடன் இந்த 10 வாகனங்களைக கூடிய விரைவில் கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் தலைப்பு இலக்கம் 428 தொடர்பான நிரந்தர சொத்துக்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை சிகாஸ் மென்பொருளில் உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | முன்பிருந்த சூழல் அமைச்சின் (160) கீழ் நிரந்தர சொத்துக்கள் கணக்கிலிடப்பட்டுள்ளதுடன் அச் சொத்துக்கள் இதுவரை மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைசுக்கு இன்னும் கையளிக்கப்படவில்லை. வருடாந்த பொருட் | நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கணிப்பினை மேற்கொள்ளப்பட்ட பிறகு 428 இன் கீழ் அறிவிக்கப்பட வேண்டிய சொத்துக்களை CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |

**1.6.4 வைப்புக்கள்**

--------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 6000-0-0-013-0-174-0 கொண்ட கணக்கின் ஆரம்ப மீதியாக முன்கொண்டு வரப்பட்டுள்ள ரூபா 66,414 க்கான 05 மீதிகள், 02 வருடங்களை கடந்திருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 570(இ) மற்றும் 571(3) படி பொது வருமானத்திற்கு வரவு வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் பொது வைப்புக் கணக்கின் மீதிகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கால பகுப்பாய்வினையில் பிழையுள்ளமையினை அவதானிக்கப்பட்டது. | 2020 வருடம் அகில உலகத்திற்கும் தாக்கத்தினை உண்டுபண்ணடிய கொவிட 19 திடீர் தொற்று நோய் நிலைமை காரணமாக இலங்கையிலும் முழு அரச நிறுவனங்களில் சேவை புரியும் ஊழியர்களின் வருகையினை நூற்றுக்கு 50 ஆக வரையறுக்கப்பட்ட மையினால் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்த நேர்ந்தன. அது போன்று 2020 வருட ஆகஸ்ட் மாத தேர்தலின் பின்னர் புது அமைச்சுக்கள் தாபிக்கப்பட்டதுடன் கணக்கு பிரிவுக்கான ஊழியர் எண்ணிக்கையினையும் 03 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறான காரணிகளால் 6000-0-0-013-0-174-0 கொண்ட கணக்கின் ஆரம்ப மீதியில் 2-5 வருடங்களை விஞ்சிய ரூபா 66,414 தொகையினை பொது வருமானத்தில்வரவு வைக்கப்பட்டிருக்காமையினை ஏற்றுக் கொள்வதுடன் அதனை 2021 மார்ச் மாத கணக்குப் பொழிப்பின் மூலமாக பொது | சரியாக கணக்கீட்டினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வருமானத்தில் வரவு வைக்கப்பட்டமைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனை அறியத் தருகின்றேன். எதிர்காலத்தில் 06 மாதங்கள் முடிவுற்றதும் சம்பந்தப்பட்ட மீதிகளை பொது வருமானத்தில் வரவு வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | |

**1.6.5 கணக்காய்வு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்ப மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடுகளுக்கிடையிலான ஏற்ற இறக்கத்தினை தெளிவுபடுத்தும் செலவின பொழிப்பினை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 428-1-2-1409 செலவின விடயத்தின் நி.பி 66 இன் கீழ் 428-1-2-1506 ஒதுக்கீடு போதுமானதாக இல்லாது இருந்தமையினால் செலவின விடயங்களுக்கிடையில் ஒதுக்கீட்டினை மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சினைக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன் வட்டி அதிகரித்தமையினால் அவ் ஒதுக்கீடுகள் விஞ்சப்பட்டு உள்ளன. அக்குறிப்பினை ACA-2(i) காட்டப்பட்டுள்ளதுடன் ACC 2(iii) ஆரம்ப மற்றும் திருத்தப்பட்ட கணக்குகளின் மதிப்பீடுகளுக்கு இடையிலான ஏற்ற இறக்கத்தினை தெளிவுபடுத்தும் கணக்கு பொழிப்பினை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்காமை கைத்தவறு என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். | சரியாக கணக்கீட்டினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிகழ்ச்சித்திட்டம் 01 இன் கீழ் 06 செலவின விடயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 02 கீழான ஒரு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 2,100,000 ஒதுக்கீடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவும் தொற்று நிலைமை காரணமாக செலவினங்கள் கட்டுப்படல், செப்தெம்பர் முதற்கொண்டு திசெம்பர் வரையிலான காலத்தினுள் கட்டட திருத்தப் பணிகள் கட்டுப்படல், குறை நிரப்பிற்கான பற்றுச் சீட்டுக்கள் கிடைக்காமை ஆகிய காரணிகளால் சேமிப்பினை ஏற்பட்டுள்ளது. | ஒதுக்கீட்டினை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் சரியாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) நிகழ்ச்சித்திட்டம் 01 இன் கீழ் 10 செலவின விடயங்களுக்கான நூற்றுக்கு 30 முதல் நூற்றுக்கு 93 வரையிலான வீச்சில் சேமிப்பும் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 02 கீழான 05 செலவின விடயங்களில் நூற்றுக்கு 25 முதற்கொண்டு நூற்றுக்கு 97 வரையிலான வீச்சில் சேமிப்பினை ஏற்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | -மேற்படி- |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 30 ஆந் திகதி வாகனமொன்றுக்கு ரூபா 205,568 செலவிடப்பட்டு டயரினை கொள்வனவு செய்தல் மற்றும் வீல் பெலன்ஸ் பண்ணுவதற்கு 2021 பெப்ரவரி 25 ஆந் திகதி வவுச்சர் இலக்கம் 83 மூலம் செலவு செய்யப்பட்டிருந்தது.. | அச்செலவினை தவறுதலாக இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான அட்டவணையில் பிரதி பண்ணப்படாததுடன் அவ்வாறானவை மீண்டும் ஏற்படாத வண்ணம் கவனம் செலுத்தும் படி விடய எழுதுநருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பொது நிதிச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயன்தரு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வ தன்மையினை காலத்திற்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமைகளை பயன்தரு வகையில் முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகவும் அம்மீளாய்வுகளை எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறானதொரு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றினை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் அமைச்சுக்கு கணக்காய்வு பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் சிற்சில வேளைகளில் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கடிதங்கள் மூலமாக அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் அப்பதவி வெற்றிடமாக உள்ளதுடன் இது தொடர்பாக கடமையினை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நீர்ப்பாசன அமைச்சினால் நடாத்தப்படும் கணக்காய்வுக் குழு கூட்டம் மூலம் இவ்வமைச்சின் கடமைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. | 2018 இன் 19 இலக்கம கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடான இணக்கமின்மைகள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்பு சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாண இலக்கம் 429 | 2020 ஆம் ஆண்டின் கணக்கு ஏடுகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள், மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செலவின பேரேட்டினை சமப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 திடீர் தொற்று நிலைமை காரணமாக இலங்கையிலும் முழு அரச நிறுவனங்களின் ஊழியர்களின் வருகையினை நூற்றுக்கு 50 வரையறுக்கப் பட்டமையினால் , 2020 ஆகஸ்ட் பொதுத் தேர்தலின் பின்னர் கணக்குப் பிரிவிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையினை 03 மாத்திரம் மட்டுப்படுத்தப் பட்டமையினால், செலவின பேரேட்டுக்கான விடய எழுதுநர் இல்லாமை இதற்கான காரணமாகும். எதிர்காலத்தில செலவின பேரேட்டினை சரியாக சமப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளும் படி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | வருடாந்த பொருட் கணிப்பினை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருட் கணிப்பினை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கூடிய விரைவில் பொருட் கணிப்பு அலுவல்களினை செய்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - மேற்படி -. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் வருடாந்த கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை 2021 ஏப்ரல் 05 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு சம்பந்தப்பட்ட வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை தயாரிப்பதற்கான நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு அதனை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.5 முற்பணம் வழங்கல் மற்றும் சமப்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 371(5) உப கட்டுநிதி ஒன்றினை வழங்கியதன் பின்னர் சம்பந்தப்பட்ட அலுவலினை முடிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் அவ் உப கட்டுநிதியினை மீளச் செலுத்தப்பட வேண்டியுள்ள போதிலும் 13 சந்தர்ப்பங்களில் 12 நாள் முதற் கொண்டு 173 நாள் வரையிலான காலவீச்சில் கட்டுநிதியினை செலுத்துவதில் தாமதப்பாடு இருந்தமையினை அவதானிக்க கூடியதாக இருந்தது. | விருந்துபசார செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள முற்பணத்தினை முழு வருடத்திற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அம் முற்பணத்தினை மாதாந்தம் மீள் நிரப்பல் செய்யப்படுவதில்லை. மேலும் அமைச்சினை இரு இராஜாங்க அமைச்சுக்காகவும் ஒரு நீர்ப்பாசன உத்தியோகத்தர்களை ஒவ்வொரு பிரிவுக்குமாக வேறாக்கப்பட்டுள்ளமையினால் மற்றும் கொவிட் 19 தொற்றுக் காரணமாக உத்தியோகத்தர்களினது வருகையினை கட்டுப்படுத்தப்பட்டமையினால் அவ் உத்தியோகத்தர் மூலமாக இந்த முற்பணத்தினை மீளப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. | அலுவல் முடிந்ததும் முற்பணத்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதிப்பிரமாணம் 371(2)(ஈ) பிரகாரம் உப கட்டுநிதி பெற்றுக் கொடுப்பதனை பதவியணியினர்களுக்கு மாத்திரம் மேற்கொள்ளப் பட வேண்டியிருந்த போதிலும் 9 சந்தர்ப்பங்களில் அதனை பதவியணியினர் அல்லாதவர்களுக்கும் ரூபா 95,728 உப கட்டுநிதியினை வழங்கப்பட்டிருந்தது. | இவ் அமைச்சின் கீழ் போதுமான அளவில் பதவியணியினர் இல்லாது இருந்ததன் காரணமாக செயலாளரினது அங்கீகாரத்தினை பெறப்பட்டு அவ்வேளை பணிக் குழாமில் பணியாற்றிய தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு அம்முற்பணத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட "பூகோள காலநிலை மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு திருப்திகரமாக முகம் கொடுப்பதற்கான ஒன்றிணைந்த நீரோட்ட மற்றும் நீர் வள முகாமைத்துவத்திற்கான கருத்திட்டம் 2020 வருடம் செப்தெம்பர் மாதம் முதல் மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு அதன் செலவினங்களை பொது வைப்புக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினங்களை பொது வைப்புக் கணக்கு மூலம் மேற்கொள்வது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட முறையான அனுமதியினை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நீர்ப்பாசன அமைச்சிற்கு பெற்றுக் கொடுக்க வேண்டியிருந்த போதிலும் நிலவிய தொற்று நோய் நிலைமை காணரமாக ஊழியர்களின் வருகை நூற்றுக்கு 50 வரையறுக்கப்பட்டிருந்த மையினால் மீதிகளை பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு தாமதமானதுடன் பிரதான நிதி அதிகாரியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதன் பிரகாரம் இவ் அமைச்சின் பொது வைப்புக் கணக்கின் மூலம் மேற்கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு ஒப்புக் கொண்டதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களமும் அதனை அங்கீகரித்துது. மேலும் தற்போதைக்கு வைப்புக் கணக்கில் சம்பந்தப்பட்ட கருத் திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலுத்தல்கள் முடிவடைந்துள்ளதுடன் மேலும் செலுத்தப்பட வேண்டியுள்ளது 08 | செலவுகள் மேற்கொள்ளப் படும் போது முறையான எழுத்து மூல அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

வவுச்சர்களுக்கு மட்டுமே ஆகும்.
பின்னர் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் இலக்கம் NPD/PPPF/IWWRMP மற்றும் 2020/10/14 திகதிய கடிதம் மூலம் 2020 நவம்பர் இறுதியாகும் போது கருத் திட்டத்தின் செலுத்தல்கள் யாவும் முடிக்கப்பட வேண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் மேற்படி இலக்கம் கொண்ட 2020.11.27 திகதிய கடிதம் மூலம் 2020.12.10 திகதியாகும் போது கருத் திட்டத்தின் சகல கொடுப்பனவுகளும் முடிக்கப்பட்டு மீதியாகவுள்ள பண மீதியினை தேசிய திட்டமில் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கும் படி கூறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்கள தொலைபேசி பெறப்பட்ட வாய்மொழி மூலமான ஆலோசனைப் படி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் பிரதான நிதி அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட வாய்மூல ஆலோசனைகளின் படி கருத்திட்டத்தின் இறுதி செயற்பாடுகளை இவ் அமைச்சின் மூலமாகவே மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2020.12.10 கருத்திட்டத்தின் இறுதி பண மீதியினை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு அலுவல்கள் முடிக்கப்பட்டுள்ளன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நட்டங்கள் மற்றும் விடப்பட்டமைக்கான கூற்று மற்றும் ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டமைக்கான கூற்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் அமைச்சு 2020 செப்தெம்பர் மாதம் முதல் செயற்படும் புது அமைச்சு ஆனபடியினால் அறிவிக்கப்படுவதற்கான நட்டங்கள் மற்றும் விடப்பட்டவைகள் இல்லாமையினால் நட்டங்கள் மற்றும் விடப்பட்டவைக்கான கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அவைகள் இல்லாமையினை நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படாமை கைத்தவறு என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். | பொது நிதிச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சிரேஷ்ட முகாமைத்துவ தரத்திலான 09 பதவிகள் இரண்டாந் தரத்திலான 13 பதவிகள், ஆரம்ப தரத்திலான 06 பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன் ஒரு பதவி மேலதிகமாக இருந்தது. | மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பணிக் குழாம் தொடர்பாக ஒரு சில முறை அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினைக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. பட்டதாரி பயிலுனர்களைக் கொண்டு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை முகாமைத்துவப்படுத்தி கொள்ளப்படுகின்றன. | முகாமைத்துவ திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமினை பேணிச் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |